மெட்ரோ ரெயிலில் 5 மாதத்தில்

# அரசு பள்ளி மாணவர்கள் 20 ஆயிரம் பேர் பயணம்

சென்னை, நவ.22–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ ரெயிலில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி மாணவ–மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம், பரங்கிமலை மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ். வழியாக விமான நிலையம் வரை மெட்ரோ ரெயிலில் கல்வி பயணம் ஏற்பாடு செய்து மாணவர்கள் அழைத்து செல்லப்படுகின்றனர்.

அந்த வகையில், கடந்த 2018–2019–ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31 ஆயிரத்து 178 மாணவ – மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணித்து பயன்பெற்றனர். 2019–2020–ம் ஆண்டில் கடந்த ஜூன் முதல் அக்டோபர் வரையிலான 5 மாதத்தில் 20 ஆயிரத்து 195 மாணவ – மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து உள்ளனர்.